ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2260/72 - 2021 දෙසැම්බර් මස 31 වැනි සිකුරාදා - 2021.12.31

*2260/72 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப் பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பதில் நிதி அமைச்சர், பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபார பண்ட இனம் தொடர்பில்அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் உபபிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, இக்கட்டளையானது, 2022, சனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 06 மாத காலப் பகுதிக்கு செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்டதும் 2021, ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதிய 2249/16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட உருளைக்கிழங்குகள் (இ. மு. குறியீடு 0701.90) தொடர்பானதும், 2021, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 2244/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட பெரிய வெங்காயம் (இ. மு. குறியீடு 0703.10.20) தொடர்பானதுமான கட்டளையானது, 2022, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து வலுவுக்கு வருமாறு மீளப்பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

**பேராசிரியர் ஜி. எல். பீரிஸ்,**
பதில் நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு
கொழும்பு 01.
2021, திசெம்பர் 31.

1A - PG 5680 — 485 (2021/12)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | | | | *II ஆம் நிரல்* |
|---|---|---|---|---|
| *வியாபார பண்ட இனம்* | | | | *விசேட வியாபார பண்ட அறவீடு* |
| | *இ.மு தலைப்பு* | *இ. மு குறியீடு* | *விவரணம்* | |
| *1* | *07.01* | *0701.90* | பிற உருளைக்கிழங்கு | கிலோ கிராமிற்கு 20.00 ரூபா |
| *2* | *07.03* | *0703.10.20* | பெரிய வெங்காயம் | கிலோ கிராமிற்கு 10.00 ரூபா |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.